நம் முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான "நான் முதல்வன் திட்டம், தமிழ்நாட்டு மாணவர்களின் கனவுகளுக்கு சிறகு தரும் வகையில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. நான் முதல்வன் திட்டத்தின் SCOUT முன்னெடுப்பின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மாணவ – மாணவியர் 25 பேர், இங்கிலாந்தின் நியூகேஸ்டல் துர்ஹாம் பல்கலைக்கழகத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்று தாயகம் திரும்பியுள்ளனர். அவர்களை நேற்று (17.6.2024) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, இங்கிலாந்தில் அவர்கள் பெற்ற பயிற்சி குறித்தும், அவற்றின் பயன்கள் குறித்தும் கேட்டறிந்தார். 'நான் முதல்வன் திட்டம்' அவர்களின் கற்றல் எல்லையை வேறு தளத்துக்கு எடுத்துச் சென்றுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்த நம் மாணவர்களை வாழ்த்தி நினைவு பரிசினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி, மேலும், அவர்களின் அடுத்தடுத்த முயற்சிகளுக்கும் 'நான் முதல்வன் திட்டம்' உறுதுணையாக இருக்கும் என்று வாழ்த்தினார்.

வாக்குச்சாவடியைக் கைப்பற்றும் கலாச்சாரத்தைத் தொடங்கியதே ஜெயலலிதா ஆட்சியில்தான்!

விக்கிரவாண்டியில் டெபாசிட் பறிபோகும் அச்சத்தால் இடைத்தேர்தலைப் புறக்கணித்துள்ளது அ.தி.மு.க.!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, ஜூன் 18– சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :–

தமிழ்நாட்டில் வாக்குச்சாவடியை கைப்பற்றும் கலாச்சாரம் தொடங்கியதே அ.தி.மு.க.தான். ஜெயலலிதா ஆட்சியில்தான் இது நடந்தது. நானே பாதிக்கப்பட்டேன். அதில் வேடிக்கை என்னவென்றால் 2,000 ஓட்டுகள் இருந்த இடத்தில் 2,300 ஓட்டுகள் போட்டார்கள்.

பாண்டியன் என்ற தேர்தல் அதிகாரியிடம் நான் புகார் கொடுத்தபோது, "எவ்வளவு ஓட்டு இருந்தது - எவ்வளவு ஓட்டு பதிவாகியிருக்கிறது. இந்த கணக்கை மட்டும் எடுங்கள்" என்றேன். அவர் கணக்கை எடுத்தார். கிட்டத்தட்ட ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட 20 பூத்களில் 2,000 ஓட்டுகளுக்கு 2,300, 2,200 என்று பதிவானது.

காரணம் என்னவென்றால், அதிகமான பேலட் பேப்பர் கொண்டு வருவார்கள். அதையும் கைப்பற்றி குத்தி, குத்தி ஓட்டு போட்டார்கள். இதை எல்லாம் செய்தது அ.தி.மு.க. என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள்.

தேர்தல் கமிஷன் அவர்களிடம் உள்ளது. மாநில அரசிடம் இல்லை. இந்தியா முழுவதும் தேர்தல் கமிஷன் யாருடைய கையில் இருக்கிறது என்பது தெரியும். அந்த தேர்தல் கமிஷன் இருக்கும் போது ஏன் பயப்படுகிறார்கள்.

மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில்தான் எந்த கலவரமும் இல்லாமல் அமைதியாக வாக்குப்பதிவு நடந்து ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது. இந்த மக்களவை தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு நிறைய இடங்களில் டெபாசிட் போனது. விக்கிரவாண்டி தேர்தலிலும் டெபாசிட் போய் விடுமோ என்ற பயம். சசிகலா, கட்சியை இணைக்கப் போகிறேன் என்று அறிக்கை விட்டுள்ளார். இந்த சூழ்நிலையில் இந்த தேர்தலை எடப்பாடி புறக்கணித்து விட்டார்.

தேர்தல் புறக்கணிப்பு என்றால் சுட்சியில் உள்ள யாரும் ஓட்டு போடக்கூடாது. நாங்களும் ஒரு கணக்கு எடுக்கப் போகிறோம். அ.தி.மு.க.வினர் ஓட்டு போட்டார்களா என்று. அவர்கள் ஓட்டு போட்டு இருந்தால் அவர்கள் எடப்பாடியைப் புறக்கணித்து விட்டார்கள் என்று அர்த்தம்.

தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லியதை மீறி யாராவது ஓட்டு

போட்டால் கட்சியை விட்டு நீக்கிவிடுவேன் என்று சொல்லத் தயாரா? சொல்ல மாட்டார்கள். ஏதோ அவர்கள் மறைமுக ஒப்பந்தம் வைக்கலாம் என்று பார்க்கிறார்கள். எதையும் சந்திக்கின்ற ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது.

வன்னிய பெருமக்களுக்கு கலைஞர், மு.க.ஸ்டாலின் செய்ததைப்போல யாரும் செய்யவில்லை என்பது அவர்கள் எல்லாருக்கும் தெரியும். 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டை கொடுத்ததே எங்கள் தலைவர் தான். அதன் மூலமாக எத்தனை பேர் டாக்டர், இன்ஜினீயர் ஆனார்கள். எத்தனை பேர் குரூப் 1 சர்வீசில் ஐ.ஏ.எஸ். ஆனார்கள். இதை எல்லாம் அந்த மக்கள் மறந்து விடுவார்களா என்ன?

ஒன்றை மட்டும் சொல்கிறேன். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாதம் தோறும் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 கொடுத்த தன் விளைவு, அந்த தாய்மார்கள் எப்படி நன்றியுணர்வோடு வாக்களித்து வெற்றி பெற செய்தார்களோ, அதைப்போல, 20 சதவிகிதம் இடஒதுக்கீட்டால்தான் நாம் இவ்வளவு வளர்ச்சி பெற்றோம் என்பதை உணர்ந்து, ஆயிரம் ராம்தாஸ்கள் சொன்னாலும் மனசாட்சியுள்ளவர்கள், நல்லவர்கள், இதயம் படைத்தவர்கள், வன்னியர்கள் அத்தனை பேரும் தி.மு.க. கூட்டணிக்கு தான் வாக்களிப்பார்கள்.

மக்களவை தேர்தலில் பா.ம.க.வை மக்கள் கைக்க முவி விட்டார்கள். அவர்கள் சின்னமே இப்போது போய் விட்டது. சென்ற தேர்தலில் ஒரு சின்னத்திற்கு ஓட்டு கேட்டு, இந்த இடைத்தேர்தலில் இன்னொரு சின்னத்திற்கு ஓட்டு கேட்டால் அந்த ஊரில் உள்ளவர்கள் மதிப்பார்களா? எங்களுக்கு அப்படி இல்லை. நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

அ.தி.மு.க. இடைத்தேர்தல் புறக்கணிப்பு, மறைமுகமாக பி.ஜே.பி.யை ஆதரிப்பதே!

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றிக்கு உழைப்போம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 18-

ஜூலை 10 அன்று நடைபெறவுள்ள விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை மிகப்பெரிய அளவில் வெற்றியடையச் செய்ய அர்ப்பணிப்போடு உழைப்போம் - தி.மு.க.வின் வெற்றி நாட்டு மக்களின் வளர்ச்சிக்கானதாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

மக்களவைத் தேர்தல் முடிவுற்ற நிலையில், நாடெங்கும் 13 தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான தேதியைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஜூலை 10 அன்று விக்கிரவாண்டி தொகுதியில் சிறப்பாக செயல்பட்ட தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி அகால மரணமடைந்த நிலையில், அத்தொகுதியில் ஜூலை 10 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. வேட்பாளராக அன்னியூர் சிவா அறிவிக்கப்பட்டுள்ளார். தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகள் தி.மு.க. வேட்பாளர் வெற்றிக்கு ஆக்கப்பூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொண்டு விட்டன.

அ.தி.மு.க. இடைத்தேர்தலைப் புறக்கணிப்பது அதன் பலகீனத்துக்கான அறிகுறியே!

எதிரணியைப் பொறுத்தவரை பா.ம.க. சார்பில் பி.ஜே.பி. கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். பிரதான எதிர்க்கட்சியான எடப்பாடி பழனிசாமியைப் பொதுச்செயலாளராகக் கொண்ட அ.தி.மு.க. இந்த இடைத்தேர்தலைப் புறக்கணித்திருப்பது - அது ஓர் அரசியல் கட்சி என்ற நிலைப்பாட்டுக்கான கடமையை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்குவது உள்நோக்கம் கொண்டது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இது அக்கட்சிக்கான தோல்வியின் அச்சத்தைப் புலப்படுத்துகிறது. அக்கட்சித் தொண்டர்கள் மத்தியில் மட்டுமல்ல, பொதுமக்கள் மத்தியில், வாக்காளர்கள் மத்தியில் அ.தி.மு.க.வுக்கு இருப்பதாகக் கூறப்படும் பொது மதிப்பையும் இழக்க நேரிடும் என்பதில் அய்யமில்லை.

பி.ஜே.பி.,க்கு மறைமுக ஆதரவா?

அ.தி.மு.க. இடைத்தேர்தலைப் புறக்கணித்திருப்பது - பல அய்யப்பாடுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதில் அய்யமில்லை. நடந்து முடிந்த 18 ஆவது மக்களவைத் தேர்தலில்கூட பி.ஜே.பி.யோடு அ.தி.மு.க. கூட்டணியை முறித்துக் கொண்டிருந்தாலும், தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடியை விமர்சிக்கவில்லை. இதனை தி.மு.க. உள்ளிட்ட எதிர் அணியினரும் தேர்தல் நேரத்திலேயே சுட்டிக்காட்டி, விமர்சனம் செய்தனர்; தொலைக்காட்சிகளின் விவாதங்களிலும் இந்தக் கருத்து விளாசப்பட்டது.

மறைமுகமாக பி.ஜே.பி., - பா.ம.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்கும் நிலைப்பாட்டை அ.தி.மு.க. எடுக்கும் என்று வாக்காளர்கள் கருதுவதைத் தவிர்க்க முடியாது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பி.ஜே.பி. கூட்டணியும், அ.தி.மு.க. கூட்டணியும் பெரும் தோல்வியைச் சந்தித்த நிலையில், எப்படியாவது ஓடும் பி.ஜே.பி. கூட்டணி ரயிலில் தொற்றிக்கொண்டு பயணம் செய்யலாம் என்ற முடிவுக்கு அ.தி.மு.க. வந்துவிட்டதாகவே கருதுவதற்கு அழுத்தமான நியாயங்கள் உண்டு.

பா.ம.க. பாடம் பெறும்!

வெகுமக்கள் வெறுப்பை மலையளவு சம்பாதித்து வைத்துள்ள ஒன்றிய பி.ஜே.பி. அரசு ஓடத்தில் பயணித்த பா.ம.க. பட்டும் பாடம் கற்கவில்லை என்பது பரிதாபமே! சமூகநீதியில் பா.ஜ.க.வின் நிலைப்பாடு என்னவென்று தெரியாதா? 'நீட்'டைத் திணிப்பதன் பின்னணியைப் பா.ம.க. அறிய மாட்டாதா? இடபுள்யூஎஸ். திட்டம் என்பது யாரைக் கொழுக்க வைக்க என்ற அரிச்சுவடி பாடம் பா.ம.க.வுக்குத் தெரிந்த ஒன்றுதானே!

ஜாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தும் பா.ம.க. அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துத் தேர்தலில் போட்டியிட்டால், பா.ம.க.மீது தமிழ்நாட்டு மக்களின் நம்பகத்தன்மை எப்படி இருக்கும்? தந்தை பெரியாரின் சமூகநீதி மண் - பா.ம.க.வின் இந்த நிலைப்பாட்டை ஜீரணித்துக் கொள்ளுமா? "கரடி என்று தெரியாமல் கம்பளிப் போர்வை என்று கட்டி அணைத்தவரின்" கதிக்குத் தானே பா.ம.க.வும் ஆளாகும்.

பா.ம.க.வை வெகுமக்கள் புறக்கணிப்பார்கள் என்பதில் அய்யமில்லை! பா.ம.க. கூறி வரும் எந்தக் கொள்கைக்கும் விரோதமான பி.ஜே.பி.யோடு கூட்டு வைத்துத் தேர்தலில் போட்டியிட்டால், தமிழர்கள் முற்றிலுமாக பா.ம.க.வைநிராகரிப்பார்கள் என்பது சுவர் எழுத்தே!

ஊழலைப்பற்றி எல்லாம் பேச முடியாது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல்பற்றி சி.ஏ.ஜி. அறிக்கை என்ன கூறுகிறது? 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது என்று கூறவில்லையா? தி.மு.க.வை எதிர்த்து நிற்கும் பா.ம.க.வின் எந்தப் பிரச்சாரமும் எடுபடப் போவதில்லை.

இந்திய அளவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் உயர்ந்து நிற்கும் பிம்பம்!

சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிம்பம் இன்றைக்கு இந்தியா முழுமையும் செம்மாந்து நிற்கிறது. இந்தியா கூட்டணி என்ற கட்டமைப்பின் முதுகெலும்பாகவும் திகழ்கிறார். தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. ஆட்சி நாளும் நாளும் வளர்ச்சித் திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், தி.மு.க.வை எதிர்த்து வெற்றி பெறுவது என்பது முயற்கொம்பே!

"மக்கள் நல அரசு" (Welfare State) என்பதற்கு இலக்கணமாகத் திகழும் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை எடைபோட்டுப் பார்த்து மிகப்பெரிய வெற்றியை விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெகுமக்கள் தி.மு.க.வுக்கு அளிப்பார்கள் என்பதில் எள்ளளவும் அய்யப்பாட்டிற்கு இடமில்லை.

சமூகநீதிதான் எங்கள் உயிர்மூச்சு என்று தொடக்கத்தில் சொன்னவர்கள்!

பெரியாரையும், காரல் மார்க்சையும் படம் போட்டு "அனைவருக்குமான சமூகநீதிதான் எங்கள் உயிர்மூச்சு" என்று தொடக்கத்தில் கூறி, மக்களிடையே அறிமுகமான பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் அல்ல; பெயரளவுக்கு அப்படியிருந்தாலும், அது பா.ஜ.க.வின் மாயக்குதிரை - ஜாதிவாரிக் கணக்கெடுப்பை பிரதமர் மோடியிடம் வற்புறுத்தி பெற முடியாத நிலையில் உள்ள நிதிஷ்குமாரின் கூட்டாளியான பாட்டாளி மக்கள் கட்சி என்ற பெயரில் உள்ள உருவம்மாறி அங்கே உலா வரும் பா.ஜ.க. தி.மு.க. வேட்பாளர் வெற்றிமூலமே சமூகநீதியைக் காப்பாற்ற முடியும்!

அ.தி.மு.க., விக்கிரவாண்டி இடைத்தேர்தலைப் புறக்கணித்ததாகச் சொல்லி, 'வீரவசனம்' பேசுவது, பா.ஜ.க. அணிக்கு உதவிட, உத்தரவுக்குக் கீழ்படிந்த பா.ஜ.க.வின் மறைமுக - "மாயக்குதிரைகளே", "மாய மான்களே" என்பதை வாக்காளர்கள், குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூக வாக்காளர்கள் உள்பட அனைவரும் உணர்ந்து, உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் வெற்றி மூலமே சமூகநீதியைக் காப்பாற்ற முடியும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு!

இட ஒதுக்கீட்டினால் பெரிதும் பயன்பெற்றவர்கள் வன்னியர்கள்! கலைஞரின், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு இட ஒதுக்கீட்டினால் பெரிதும் பயன்பெற்றவர்கள் வன்னியர்கள். மருத்துவம், பொறியியல் பட்டப் படிப்புகளில் ஏராளமானோர் இடம் பெற வாய்ப்பு ஏற்படுத்தியது - தி.மு.க.தானே தவிர, காவிகளோ அல்லது வேறு கபட தாரிகளோ அல்ல!

அதுமட்டுமா? போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்த பா.ம.க. குடும்பங்களுக்கு, அரசின் உதவித்தொகை பெற்றுத் தந்த அரசியல் பெருந்தகை முதலமைச்சர் கலைஞர் என்பதை மறக்கலாமா?

ஆதரவுக்கரத்தை நீட்டுவோம் – வெற்றியை நிலைநாட்டுவோம்!

தி.மு.க. தலைவராகத் தேர்வு செய்யப்பட்டபோது "நான் புதிதாகப் பிறந்திருக்கிறேன்" என்றார் தளபதி மு.க.ஸ்டாலின் (21.8.2018). அது வெறும் அழகு வார்த்தையல்ல - அர்த்தமிக்க ஆழமான பொருளைக் கொண்ட பிரகடனம்! மேலும் மேலும் அவருக்கு ஆதரவுக் கரத்தைப் பலமாக நீட்ட நீட்ட, நாட்டு மக்கள் நற்பலனை அடைந்து கொண்டே இருப்பார்கள்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய திராவிடர் கழகத்தின் பங்களிப்பு சிறப்பானதாகவே இருக்கும். கழகத் தோழர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றுமாறு வலியுறுத்துகிறோம். தி.மு.க. வெற்றி என்பது வெறும் ஒரு கட்சியின் வெற்றியல்ல - நாட்டு மக்களின் நன்மைக்கான - வளர்ச்சிக்கான - உரிமைக்கான மக்களின் பொது நலத்திற்கான வெற்றி என்ற வீர வரலாறு தொடரும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி எம்.சி. தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி. - க.ஜெயராமன் பங்கேற்பு!

பெரம்பூர் 36-வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்!

750 பேருக்கு நல உதவிகள் வழங்கி வி.மதிமாறன் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, ஜூன் 18

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்குப்பகுதி 36-வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 750 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் பொதுக் கூட்டம் இன்று (18.06.24) மாலை 6 மணிக்கு 36-வது வட்டம் எஸ்.ஏ.காலனி, 7வது தெருவில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு 36-வது வட்ட செயலாளர் ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி எம்.சி. தலைமை தாங்குகிறார். பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், 36 (அ) வட்ட செயலாளர் க.பாபு, பொதுக்குழு உறுப்பினர் ஏ. தமிழ்செல்வன், பகுதி துணை செயலாளர் எஸ்.சாக்ரடீஸ் ஆகியோர் முன்னிலையில் திராவிட இயக்க பேச்சாளர் வீ.மதிமாறன், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்த கூட்டத்தில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, வடக்குப் பகுதி செயலாளர் அ.முருகன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.நரேந்திரன், தலைமை செயற்குழு இரா. கருணா, மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஆர்.கமலகண்ணன், வி. தயாளன், ப.மதிவாணன், டி. கமலகண்ணன், கே.அமுல் மாமன்ற உறுப்பினர்கள் ந.சர்பஜெயாதாஸ், சி.ஆனந்தி, க.சர்மிளா காந்தி, வட்ட கழக செயலாளர்கள் த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், கேபிள் கி.தினகரன், வி.முருகன், ஜி. மாரிமுத்து, கே.வி.இராஜன், என்.கார்த்தீபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், சி.எஸ்.இரவி, கே.இ.செந்தமிழரசு, பகுதி நிர்வாகிகள் மு.சாகுல்ஹமீது, வி. வேதா, இரா.ஜோதிமணி, வி.எஸ்.பிரபு, ஏ.ஜியா, இரா. லீலாவேலு, எம்.லதா, எ.செந்தூர் பாண்டியன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட - பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கூட்டத்தில் இரா.ரவிசங்கர், சுரேஷ், மு.ஒய்லர், ஆர்.ரம் ஜான் பீவி, ஆர்.செல்வகுமார், ஏ.அந்தோணி சார்லஸ், சி.குணசேகரன், வி.ரமேஷ்குமார், எம்.ஏ சந்திரன், ஜி.கணேஷ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இறுதியாக வட்ட துணை செயலாளர் கே.வி.சோமசுந்தரம் நன்றியுரையாற்றுகிறார்.

வை.கௌதமன் தலைமை! ஜெ.ஜெ.எபினேசர் - க.ஜெயராமன் - அ.முருகன் முன்னிலை!

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாணவர்களுக்கு நல உதவிகள்!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்கினர்!

சென்னை, ஜூன் 18 -

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதியில் மாவட்ட இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 550 பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வை.கௌதமன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.ஜெ.எபிநேசர் எம்.எல்.ஏ., பெரம்பூர் தெற்கு வடக்கு பகுதி செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் பகுதி துணை செயலாளர் வி.வேதா, 46வது வட்ட செயலாளர் வி.முருகன், 46வது மாமன்ற உறுப்பினர் சி. ஆனந்தி ஆகியோர் முன்னிலையில் கே.மதன், இர.பொன்இளவரசன், ப.சோமசுந்தரமூர்த்தி, ஈ.ரவிக்குமார், சி.சுரேஷ், எச்.ராஜ்குமார், உமா.ஜான், எம். லோகநாதன், கே.ராஜசேகர் ஆகியோர் வரவேற்புரையில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. பள்ளி மாணவ மாணவியர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இரா.நரேந்திரன், எஸ்.ஆர். கமலகண்ணன், வி.தயாளன், மலைச்சாமி எம்.சி., ஏ.தமிழ்செல்வன், டி.கமலகண்ணன், வட்ட செயலாளர்கள் க.பாபு, த. ஆறுமுகம், ஜி.மாரிமுத்து, கே.தினகரன், கே.வி. ராஜன், என் .கார்த்தீபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.ஈ..செந்தமிழரசு, மற்றும் 46வது வட்ட நிர்வாகிகள் டி.டி. மணிமாறன், எம்.ஜெயக்குமார், ச.ராஜன், ஆர்.சீதா, ஆர்.ரகு, எம்.கிருஷ்ணமூர்த்தி, ஈ.கர்ணா, கே. பிரசாத், எம்.ஜெயகிருஷ்ணன், ஈ. மணிகண்டன், எம்.கார்த்திக், ஜி.கணேஷ், எஸ்.சங்கீதா, ஜி. மோகன், ஒய்.மகிமைராஜ், கே.ராதாகிருஷ்ணன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் மாவட்ட , பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: அமைச்சர் க.பொன்முடி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில்

கழகக் கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவா வேட்பு மனு தாக்கல்!

அமைச்சர்கள் - கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு!

மாவட்டச் செயலாளர் பொன். கௌதம சிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜூன் 18 -

விக்கிரவாண்டி தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர். சிவா (எ) சிவசண்முகம் வேட்பு மனு மற்றும் தேர்தல் பணிமனை திறப்பு விழா குறித்து மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளைப் பெற்ற விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் வருகிற 19.06.2024 புதன்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் விக்கிரவாண்டி செட்டிஸ்வரன் கோயில் தெருவில் தேர்தல் பணிமனை திறந்து வைத்த பிறகு அங்கிருந்து ஊர்வலமாக உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி முன்னிலையில் விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, தா.மோ.அன்பரசன், எஸ்.எஸ். சிவசங்கர், சி.வெ.கணேசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கே.எஸ்.மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்படுகிறது.

கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பெருந்திரளாக இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தல்: அன்னியூர் சிவாவை ஆதரித்து

கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் இந்திதியா கூட்டணி கட்சிகளின் திமுக வெற்றி வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், உயர்கல்வித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர்.க.பொன்முடி தலைமையிலும், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ்.ஜெகத்ரட்சகன் முன்னிலையிலும், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வரவேற்புரையும், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் . ஜெய.ரவிதுரை நன்றியுரை ஆற்றவும், இன்று (18.06.2024 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் ராதாபுரம், முருகன் அடிகளார் திருமண மண்டபம் அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் திடலில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தோழர்கள் பெருமளவில் கலந்துக் கொள்ளவும். மேலும் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 94 அ வட்ட கழகத்தின் சார்பில் சென்னை, வில்லிவாக்கத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் 14.6.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேராசிரியர் அப்துல் காதர், நாஞ்சில் சம்பத், .மதுக்கூர் இராமலிங்கம் ஆகியோர் புகழுரைத்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், பகுதி கழக செயலாளர் கூ.பி.ஜெயின் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட அ.இராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜீன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். " என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு ஆர். ராஜசேகர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக,
திரு. ஆர்.ராஜசேகர், எண்.141, மணியகாரர்தெரு, ரெண்டேரிப்பட்டு கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்-606 803. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.06.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.